**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

CC 231/2025

தேதி: 25.02.2026

**அ.சா.8 செந்தில்குமார் த/பெ செல்வம்**

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கரூா–திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை என்பதால் கனரக வாகனப்போக்குவரத்து அதிகமாக இருக்கும்என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் அரசுப்பள்ளியும், மாணவர்கள் விடுதியும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்த நேரத்தில் மக்கள் போக்குவரத்தி மிகுதியாக இருந்தது என்றால் சரிதான். அருகில் உள்ளவர்கள் சம்பவத்தை பார்ப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. சம்பவத்தை பார்த்தாக சொல்லபபடும் அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் சிட்டிலரை கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சிட்டிலரை கிராமம் முசிறி தாலுக்கா, திருச்சி மாவட்டத்தை சேர்ந்ததது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபரின் ஊர் சிட்டிலரை கிராமம் என்றால் சரிதான். நேரில் பார்த்த சாட்சிகள் அனைவரும் இறந்து போன நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் பயணம் செய்வது தவறு என்றால் சரிதான்.

3. விபத்தில் இறந்து போனவரின் இருமகன்களில் ஒருவர் முன்னாலும், ஒருவர் பின்னாலும், அதற்குபின்னர் அவருடைய மனைவியும் அமர்ந்திருந்திருந்தார்கள் என்றால் சரிதான். இருசக்கர வானத்தின் ஒட்டுநருக்கு பின்னால் அமர்ந்திருந்த இளவர் முன்னால் நடப்பதை பார்க்கமுடியாது அவருடைய தந்தையின் முதுகைத்தான் பார்க்கமுடியும் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த இறந்து போனவரின் மனைவி சேலை கட்டுவதால் இருபுறமும் கால் வைத்து அமராமல் ஒருபுறம் கால் போட்டு தெற்கு பக்கம் பார்த்துதான் அமர முடீயும் சம்பவத்தை பார்க்க வாய்ப்பில்லைஎ ன்றால்சரியல்ல.

4. விபத்தில் இறந்து போனவரின் சகோதரர்கள் பின்தொடர்ந்ததாக சொல்லப்படுவதற்கு எந்த வாகனத்தில் வந்தார்கள் அதன் பதிவு எண் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரி இடது ஒரமாக மித வேகமாக இயக்கி சாலை விதிகளை பின்பற்றி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. அதிகப்படியான நபர்களை ஏற்றி இறந்து போன நபர் கட்டுப்பாட்டை இழந்து அஜாக்கிரத்தையாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்என்றால் சரியல்ல. புகார் பட்டியல் சாட்சி 1 கொடுக்காமல் நாங்களாகவே எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல.

5. விபத்தை பார்த்த கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை அதனால் நாங்களாகவே பொய்யான சாட்சிகளை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. இறந்து போனவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு வாங்குவதற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போனவரின் உறவினர்களை காவல் நிலையத்திற்கு வரவழைத்து வழக்கை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்க நேரிடையாக செல்லாமல் நாங்கள் சம்பவ இடத்தை தவறாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.26 13:16:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**